‘சிமெண்ட்’ என்னும் பொருளின் ஆங்கில விளம்பரத்தில், அதன் பண்பாகிய ‘உறுதியான கரைசல்’ என்னும் பொருளினைக் குறிக்கும் ‘concrete solution’ என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ் விளம்பரம் இந்நிலை பிறழ்ந்து மொழிபெயர்க்கப்பட்டிருப்பதைக் கீழ்வரும் சான்று விளக்குகிறது,

எ.கா:

The concrete solution to your
Construction problem.

உங்கள் கட்டிடத் தேவைக்கு
உறுதியானத் தோழன்.

முடிவுரை :

இவ் ஆய்வுரை வாயிலாகக் கீழ்வரும் செய்திகள் புலனாகின்றன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் விளம்பரம், வணிகக் கருவியாகவும் கருத்துப்பரப்பல் கருவியாகவும் பயன்படுத்தப் படுகின்றது.

விளம்பரம் எழுதுவதற்கும் அதனை மொழிபெயர்ப்பதற்கும் சமூகவியல் உளவியல், மொழியியல், பொருளியல் ஆகிய துறைகளான சமுக அறிவியல் பற்றிய அறிவு தேவையாகின்றது.

விளம்பர மொழிபெயர்ப்பில் விளம்பரத்திற்காக ஒதுக்கப்படும் இடமும் நேரமும் பெரும் பங்கு வகிக்கின்றன.

இந்தியா போன்ற பல மொழிகள் பேசப்படும் நாடுகளில், பொருள்களின் விற்பனைக்கு விளம்பர மொழிபெயர்ப்பு தவிர்க்க முடியாததாகின்றது.

மூல மொழிவிளம்பரம் எந்த அளவில் விற்பனையின் உயர்வுக்கு வழிவகுக் கின்றதோ, அந்த அளவுக்கு மொழிபெயர்க்கப்பட்ட விளம்பரமும் விற்பனை உயர் வுக்கு வழிவகுக்க வேண்டும்.

எளிதில் நினைவில் பதியும் வகையிலும், படிப்பவர்களைப் பொருள் வாங்கு பவராகத் தூண்டும் வகையிலும் விளம்பரங்களில் தொடையுறுப்புகள் பயன்படுத் தப்படுகின்றன.

விளம்பரப்படுத்தப்படும் பொருளின் சிறப்புகளை வெளிக்கொணரும் வகையில் விளம்பரங்களில் அணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தொடைகளும் அணிகளும் பயன்படுத்தப்பட்ட ஆங்கில விளம்பரங்கள் கீழ்க் கண்ட மூன்று முறைகளில் மொழிபெயர்க்கப்படுகின்றன.

1. ஆங்கில விளம்பரங்களில் உள்ள தொடையுறுப்புகளையும் அணிகளையும் (அதே நிலையில்) பிறழாமல் மொழிபெயர்ப்பது;

2. ஆங்கில விளம்பரங்களில் உள்ள தொடையுறுப்புகள், இரட்டுற மொழிதல், சொற்குறிப்பும் பொருட்குறிப்பும் போன்றவை மொழிபெயர்க்கப்படாமை;

3. ஆங்கில விளம்பரங்களில் பயன்படுத்தப்படாத தொடையுறுப்புகளையும் அணிகளையும் பயன்படுத்தித் தமிழில் விளம்பரங்களை மொழிபெயர்ப்பது

குறிப்புகள்

1. சி. ஜெயராஜ், "விளம்பரத்தமிழாக்கம்: ஆய்வு," எம். ஃபில்., பட்டப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெற்ற ஆய்வேடு. சென்னை: 1987, பக். 7-13.

2. இவ் ஆய்வுக்குரிய முதன்மை ஆதாரங்களான (அச்சடிக்கப்பட்ட) ஆங்கில, தமிழ் விளம்பரங்கள், சென்னையில் உள்ள அத்வேவ், ஆர். கே, சுவாமி, சிஸ்டாஸ் ஆகிய விளம்பர நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

3. Warren K. Agee, et al, Introduction To Mass Communications, Harfer and Row Publications, Newyork: 1985, P.310

3a. John S. wright, et al, Advertising, Vth Ed., Tata Macrawa Publication Compary, New Delhi: 1978, P.7.

4. ச. பார்த்தசாரதி, "தமிழில் விளம்பரங்கள் ஓர் மொழிவகை ஆய்வு". டாக்டர் பட்டப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்ற ஆய்வேடு, சென்னை: 1983, ப. 399.

5. John S. Wright, et al, Advertising, P.355.

6. Arthur Judson Brewster et al Introductions To Advertising, VIth ed., Megraw- Hill Book Compary, London: 1954, P.133

7. எல். ஆர். நாராயணன். "நண்பன் ஆனது எப்படி?" குமுதம், குமுதம் பப்ளிக்கேஷன்ஸ், சென்னை. ஆகஸ்ட் 22, 1987, ப.79.

8. Ian F. Finlay, Translating, St. Pauls House, London: 1971 p,VII.

9. Theodor Savory, The Art of Translation Jonathen Cape, London: 1957, P.44.

10. அமிர்தசாகரர். யாப்பருங்கலக்காரிகை மூலமும் குணசாகர் உரையும், 14 ஆம் பதிப்பு, கழக வெளியீடு, தே. கி நா. க. சா. சென்னை:

11. மே.ப., நா.

12. மே.ப., நா.

13. மே.ப., நா.

14. மே.ப., நா.

15. மே.ப., நா.

16. மே.ப., நா.

17. "Juxtaposing two expressions which are semantically incompatible": Indubala H. Pandya, Englsh Language in Advertising, Ajanta Publications, New Delhi. 1977 P.38.

18. பவணந்தி முனிவர், நன்னூல், சிவஞானமுனிவர் உரை, மறுபதிப்பு, கழக வெளியீடு, சென்னை: 1958, நூ.366

19. தொல்காப்பியர், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, கழக வெளியீடு, சென்னை: 1951, நூ. உளசா .

20. தண்டியாசிரியர், தண்டியலங்கரம், சுப்ரமணிய தேசிகர் உரையுடன் பொருளணியியல், கழக வெளியீடு, தே .இ .நூ . ஙக. சென்னை:

21. மே. ப. , நூ .

22. "In Translations, a further problem is presented by the fact that well understood me to her in one culture may have entirely different meanings in another part of the world."
S.I. Hayakawa, Language In Thought and Action, 3rd ed., George Allen & Unwin Ltd., London 1977, P.105.

23. தொல்காப்பியர், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்: 1984, நூ .46.

துணை நூற்பட்டியல்

Agee, Warren K. Introduction to Mass Communications, Harper and Row Publication, New york; 1985.

Arthur Judson Brewster, et al, Introduction to Advertising, VIth ed, Megraw-Hill Book Company, London: 1954.

Finlay, I an F. Translating, St. Pauls House, London: 1971.

Hayakawa, S.I. Language in Thought and Action, 3rd ed., George Allen & Unwin Ltd., London: 1977.

Pandya, Indubala H. English Language In Advertising, Ajanta Publications, New Delhi:

Theodor Savory, The Art of Translation, Jonathen Cape, London: 1957

Wright, John S. et al, Advertising, Vth Ed., Tata Maciaw Publishing Company, New Delhi: 1978.

தமிழ் நூல்கள்

அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, குணசாகர் உரையுடன் 14-ஆம் பதிப்பு, கழக வெளியீடு, சென்னை: 1979.

தண்டியாசிரியர். தண்டியலங்காரம், சுப்ரமணியதேசிகர் உரையுடன், கழகவெளியீடு சென்னை: தேதி இல்லை.

தொல்காப்பியர், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்: 1984

தொல்காப்பியர், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, கழக வெளியீடு, சென்னை: 1951.

பவணந்தி முனிவர், நன்னூல், சிவஞான முனிவர் உரை, மறுபதிப்பு, கழக வெளியீடு, சென்னை: 1952.

ஆய்வேடுகள்

பார்த்தசாரதி, ச. ''தமிழில் விளம்பரங்கள் ஓர் மொழிவகை ஆய்வு,'' சென்னை டாக்டர் பட்டப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்ற ஆய்வேடு, 1983.

ஜெயராஜ், சி. 'விளம்பரத் தமிழாக்கம்: ஆய்வு' எம், ஃபில்., பட்டப்பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்ற ஆய்வேடு, சென்னை: 1987.

இதழ்

நாராயணன், எல்.ஆர். "நண்பன் ஆனது எப்படி", குமுதம், குமுதம் பப்ளிக்கேஷன்ஸ், சென்னை: ஆகஸ்ட் 22, 1987.

கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு

1. முகவுரை

இரா. பாக்கியலட்சுமி

மனித வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாகிய மொழியினைக் கொண்டு ஒருவர் தன் கருத்துக்களை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள முடிகிறது. சில நேரங்களில் நாம் மொழிவாயிலாக ஒரு செய்தியினை வெளிப்படுத்தும் போது அதனைப் பலர் பல விதமாகப் புரிந்து கொள்ளும் நிலையில்தான் மொழியின் ஆற்றல் (Linguistic Efficiency) நமக்குத் தெளிவாகின்றது. பல சொற்கள் இலக்கண நியதியுடன் ஒன்று சேர்ந்து ஒரு தொடராக அமைகின்றது. வாக்கியங்களின் அமைப்பானது மொழிக்கு மொழி மாறுபடலாம். ஒரு வாக்கியத்தில் சொற்கள் மட்டும் இடம் மாறின் வழூஉத் தொடர்கள் ஏற்படும். சொற்றொடர்களில் பொருள் மாறுபாடு ஏற்படா வகையில் சொற்களை இடமாற்றம் செய்யமுடியும். கல்வெட்டுத் தமிழில் காணப்படும் தொடரியல் அமைப்பின் சிறப்புக் கூறுகளைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கம். கர்நாடக மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சிலவற்றிலிருந்து எடுக்கப்பட்ட தொடர்களே இவ்வாய்விற்கான தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வு தொடரியல் விளக்கத்திற்காக மாற்றிலக்கணக்கோட்பாடுகளின் அடிப்படையில் அணுகப்பட்டு, கல்வெட்டுத் தமிழின் தொடரியல் அமைப்பை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் குறிப்பிடத்தக்க நோக்கமாகும்.

2. தொடரமைப்பு விளக்கம்

சொற்றொடர்கள் பல வகைப்படும். அவையாவன:

1. எழுவாய் செயப்படுபொருள், பயனிலை என்ற கூறுகள் கொண்ட பெரும் பான்மைத் தொடர்கள்;
2. வரிசைமுறை முரண்தொடர்கள்;
3. முன்னிலைப் படுத்தும் தொடர்கள்;
4. பலவாக்கியங்களை உள்ளடக்கிய தொடர்கள்;
5. பொருள் மயக்கம் தரும் தொடர்கள்;
6. விடுபட்ட சொற்களைக் கொண்ட தொடர்கள்;
7. பெரும்பான்மை, வரிசைமுறையில் செய்திகளைக் கொடுக்கும் தொடர்கள் என்று சொற்றொடர்களின் வகைகளைப் பாகுபடுத்தலாம்.

2.1 பெரும்பான்மைத் தொடர்கள்:

பெரும்பான்மைத் தொடர்கள் எனப்படுபவை பெயர், செயப்படுபொருள், வினை என்ற பொது வரிசை (General Pattern) முறையிலேயே அமைந்திருக் கின்றன.

அ) "சங்க நாயகத்தேவன் ஏரிகட்டி பயிருடன்
தேவதான சந்திராதித்தவரை செல்வதாகவிட்டேன்"
(Srinivasapur 8),

என்ற இத்தொடரில் பெயர்த்தொடர் முதலிலும் செயப்படுபொருள் இடையிலும் வினை இறுதியிலும் அமைந்துள்ளன. சங்கநாயகத்தேவன் என்ற எழுவாய் விட்டேன் என்ற பயனிலைச் சொல் கொண்டு முடிகின்றது. இதன்மூலம் இத் தொடர் தன்மைப்படுத்திக் கூறப்படுகின்ற முறையும் தெரிகிறது. செயப்படு பொருள் இரண்டிற்கும் இடையில் அமைந்துள்ளது.

ஆ) "சானாண்டை ரிஷப தேவரை பிரதிஷ்டை பண்ணுவித்தான்"
(Cintamani Ta. 85)

என்ற இவ்வெடுத்துக்காட்டு எழுவாய், செயப்படுபொருள், வினைப்பயனிலை என்ற வரிசை முறையில் காரணவினையில் முடியும் வண்ணம் அமைந்துள்ளது. இத்தொடரின் 'பயனிலை' படர்க்கையில் கூறப்பட்டுள்ளது.

2.2 வரிசைமுறை முரண் தொடர்வகைகள்

பெயர், செயப்படுபொருள், வினை என்ற வரிசையில்லாத முரண் தொடர்கள் கல்வெட்டுக்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"பாலாண்டை நாயன் கங்கேஸ்வரமுடையாற்கு திருநந்தாவிளக்கும்
காலச்சந்தி அமுது படிக்குமாக பெரியேரி முதல் முடையில்
கண்டகக் கழனியும் கண்டகக் கொல்லையும் விட்டமைத்த
பாலாண்டை நாயன் தர்மம்" (Malur, 98)

என்ற இக்கல்வெட்டுத் தொடரில் எழுவாய் முதலில் இருந்தாலும் செயப்படு பொருளுடனும் பெயர் வந்திருக்கிறது. தர்மத்திற்கே பாலாண்டை நாயன் தர்மம் என்று பெயரடையாக வந்திருக்கின்றது. மேலும், இங்கு பயனிலை என்பது இல்லை. இதனை நாமே ஊகித்துணரும் முறையில் தொடர் அமைக்கப் பட்டுள்ளது.

"உடையார் பெங்கீஸ்வரமுடைய நாயனாற்கு
முதலியார் இளவஞ்சியாரான கூத்தாடுந் தேவன்
பெரிய ஏரியில் உதகபூர்வமாகத் தந்த 8" (Mulbagal ,179)

என்ற இவ்வெடுத்துக்காட்டு எண்ணுப்பெயரில் முடிவு பெறுகின்றது. நிலம் 8 என்று கூறிய பிறகு அதன் அளவையைக் காணி, அல்லது உரி என்ற முறையில் குறிப்பிடாது எண்ணுப் பெயரில் முடியும் இத்தொடர் வழூஉத் தொடர் ஆகும். மேலும், இங்கு பயனிலை இன்றியே தொடர் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

''ஸ்வஸ்திஸ்ரீ சிறிய மழலூரிலிருக்கும் வியாபாரி
கழுமலமுடையான் சீவவனன் வடுகப்பன்
செய்வித்த தூம்பும் தொட்டியும்'' (Channapatna, 35)

''சாத்தனூர் பாலன் கௌண்டல்ய கோத்திரத்து
விஜயநாத வீரசோழ ப்ரம்ம மாராயன் புதுக்குவித்த
க்ஷேத்ர பாலந் மண்டபமும் பீடமும்'' (Kolar, 43)

மேற்கூறப்பட்ட இவ்விரண்டு கல்வெட்டுத்தொடர்களிலும் செயப்படு பொருளானது உம்மைத் தொகையாக முடிவு பெற்றிருக்கின்றன. தொடர்கள் உம்மைத் தொகையில் முடிவு பெறுவது வழூஉத் தொடர்களாகும். இவற்றை மரபு மாறிய தொடர்கள் எனலாம். இத்தொடர்களில் பிறவினைச் சொற்களைத் தொடர்ந்து உம்மைத் தொகைச் சொற்கள் வருகின்றன. பிறவினைச் சொற்கள் இங்கு எச்சங்களாக வருவதனால் இத்தொடர்கள் வழூஉத் தொடர்களே.

2.3 முன்னிலைப் படுத்தும் தொடர்கள்

முன்னிலைப்படுத்துதல் என்றால் ஒரு செயலை ஒருவன் செய்வித்தான் அல்லது ஒருவனால் செய்விக்கப்பட்டது என்று கூறி செய்தவனைக்கூறும் மரபாகும். இங்கு ஒரு செயலைச் செய்வித்தவன் அச்செயலைச் செய்தவனுக்குக் கொடுத்த சிறப்பாக இதனைக் கொள்ளலாம். முன்னிலைப் படுத்தும் தொடர்கள் காரணவினை கொண்டு முடிவு பெறுகின்றன. அடுத்த தொடர்கள் வினையாலணையும் பெயரினைச் சிறப்பிக்கவும் செயப்படு பொருளை முன்னிலைப்படுத்தவும் கூறப்படுகின்றன எனலாம்.

''சானாண்டை ரிஷப தேவரை பிரதிஷ்டை
பண்ணுவித்தான். பண்ணினவன் இராசாசாரி
பேரன் பெருமாப்பிள்ளை'' (Cintamani ,85)

என்ற இவ்வெடுத்துக் காட்டில் பெயர் முதலிலும் செயப்படுபொருள் இடையிலும் காரண வினை இறுதியிலும் வழங்குகின்றன. பிறவினையில் முடிந்த சொல் அடுத்த அடியில் வினையாலணையும் பெயரில் (Participial Noun) துவங்குகிறது. இராசாசாரி என்பவன் இலக்கணங்களால் குறையாத வகையில் சிலை செய்வதில் வல்லவன். இங்கு செய்தவனைத் தனியாகச் சிறப்பிக்க வேண்டியும் அவன் குடும்பமே காலம் காலமாகப் புகழ்பெற்ற நிலையினைக் காட்டுவதற்காகவும் தனியாக ஒரு தொடர் அமைக்கப்பட்டுள்ளது எனலாம். மேலும் செய்திகளை எழுதி வைத்துக்கொண்டு வெட்டும் பழக்கமும் இல்லையாதலாலும் செய்திகளை மனத்தில் வாங்கிக்கொண்டு வெட்டும் போது இந்நிலை ஏற்படுகின்றது என்று கூறவும் முடியாது. காரணம் இது போன்று பிறவினையில் முடியும் வேறு தொடர்கள் ஒருவனின் அல்லது ஒரு செயலின் சிறப்பினைக் காட்ட நினைத்தால் வினையாலணையும் பெயரில் அடுத்த அடியில் தொடர்கின்ற நிலை காணப்படுகின்றது.

> "ஸ்வஸ்திஸ்ரீ இத்திரு முற்றம் செய்வித்தான்
> காரிகுடி உலக முண்டான் மகன் கூத்தாண்டி
> தண்ட நாயகன். இத்திரு முற்றம் தில்லைக்
> கூத்த விண்ணகர்" (Srirangapatna, 58)

என்ற இத்தொடரில் பயனிலை இடையிலும் காரண வினையாகவும் எழுவாய் கொண்டு முடிந்த மரபு மாறிய தொடராக இருப்பினும் இது வழூஉத் தொடரல்ல. தில்லைக் கூத்தரின் சிறப்பினை முன்னிலைப்படுத்த அடுத்த தொடரினை இங்குக் கொடுத்திருக்கிறார்கள் எனலாம். இத்தொடரில் தில்லைக்கூத்த விண்ணகரத்தை செய்தவன் பெயரினை இங்கு கூறவில்லை. இதன் மூலம் தலச் சிறப்பிற்காகவே இத்தகைய சொற்றொடர்களை அமைத்திருக்கிறார்கள் என்பதனை நாம் அறிதியிட்டுக் கூறலாம்.

2. 4. பல வாக்கியங்களை உள்ளடக்கிய தொடர்கள்

கல்வெட்டுத் தொடரில் பெயர்ப் பயனிலையின் முன்னர்ப் பல பெயரடைகள் வருகின்ற முறை காணப்படுகின்றது. இப்பெயரடைகளின் இடையில் பல வாக்கியங்கள் புதைந்துள்ளன (Embedded Sentences). இது போன்று செயப்படு பொருள், பயனிலை என்ற ஒவ்வொன்றிற்கு முன்னும் பல அடைகள் வந்தமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டாக,

> "ஸ்வஸ்திஸ்ரீ சகரையாண்டு 1198ம் ஆண்டான தாது வருஷத்து மகர ரவி 23ந்தியதி ஞாயிற்றுக் கிழமையும், பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் மிருகசீரிஷமுமான இற்றைநாள் ஜயங்கொண்ட சோழ இளஞ்சிராயர் முதலிகளில் பொன்னப்பிளை மகன், அம்மான் வயிராண்டை பிரதிஷ்டித்த நாயனார் பெங்கீஸ்வர முடையார்க்கு சிறு காலைச் சந்தி அமுது செய்துதருளுவதாக கல்பள்ளி மடுவில், என்குட்டையில் கழனியில், முக்கண்டகக் கழனி தேவ தானமாக சந்திராதித்தவரை செல்வதாக விட்டேன் தனிமை நீக்கினாரென"
> (Mulbagal, 184)

என்ற இக்கல்வெட்டுத் தொடரில் எழுவாய் மறைந்துள்ளது. (அதாவது வெளிப் படையாகச் சொல்லப்படவில்லை.) இதைத் தோன்றா எழுவாயாக நாம் உணர முடியும். இங்கு தனிமை நீக்கினார் என்ற பெயருக்கு முன்னர்ப்பல தொடர்கள் மறைந்துள்ளன. அம்மான் வயிராண்டை என்பவர் பொன்னப்பிளையின் மகன். பொன்னப்பிளை என்பவர் ஜயங்கொண்ட சோழ அரசனின் இளவஞ்சியராயர் முதலிகளில் ஒருவன். முதலி என்பது ஒரு பட்டத்தின் பெண் இளஞ்சியராயர் என்பதும் ஒரு பட்டத்தின் பெயர். அம்மான் வயிராண்டை என்பவன் தெய்வத்தைப் பிரதிஷ்டை பண்ணுவித்தான். இத்தெய்வம் நாயனார். இவர் பெங்கீஸ்வரம் என்ற கோயிலில் குடிகொண்டவர். அதனால் பெங்கீஸ்

வரமுடைய நாயனார் என்று பெயர் பெற்றவர். இத்தெய்வத்திற்குத் தனிமை நீக்கினார் என்ற நான் தானம் கொடுத்தேன். காலைப்பொழுது அமுது செய்யத் தானம் கொடுத்தேன். கல்பள்ளி மடு என்ற இடத்தில் என்குட்டை என்ற ஊரில் மூன்று கழனி நிலம் கொடுத்தேன். தேவதானமாகக் கொடுத்தேன். சந்திர சூரியர்கள் உள்ளவரை இத்தர்மம் நடக்க வேண்டும் என்பதற்காகக் கொடுத்தேன் என்பன போன்ற பல தொடர்கள் ஒன்றனுள் ஒன்று பொதிந்து கிடக்கின்றன. இவ்வாறு விரிவாக எழுதினால் கல்வெட்டுக்களுக்கு இடம் போதா என்ற காரணத்தால் பல பெயரடைகள் கொண்ட நீண்ட சொற்களை உருவாக்கி அமைத்திருக்கலாம் என்பதும் புலனாகிறது. அதே சமயம் கல்வெட்டுகளில் கூறப்படும் செய்திகள் விரிவாகவும், மாறுபட்ட பல காலத்தவர்களுக்கும் புரியும் படியும் இருக்க வேண்டும். குறைந்த இடத்தில் நிறைந்த செய்திகளைத் தெரிவிக்க வேண்டும் என்ற அவாவினாலும் நீண்ட தொடர்கள் கல்வெட்டுக்களில் அமைக்கப்பட்டிருக்கலாம். இது போன்ற நிலையினை இன்று பத்திரிக்கைகள் மற்றும் சில செய்தித் தொடர் மூலங்களில் நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. மேலும் பல வாக்கியங்கள் பொதிந்து கிடக்கும் கலவை வாக்கிய அமைப்பானது கல்வெட்டுத் தமிழில் இயல்பாகக் காணப்படுகின்றது. குறிப்பாக முற்றுவினை, வினையெச்சமாக அமையும் நிலையில் இத்தகைய கலப்பு வாக்கியம் அமைப்படுகிறது. இங்கே விளக்கப்படும் கல்வெட்டில் (Bowringpet. 38$_a$) நான்கு வாக்கியங்கள் அகப்படும் வாக்கியங்கங் களாகவும் (Embedded Sentences) ஒரு வாக்கியம் அகப்படும் வாக்கியமாகவும் (Embedding Sentence.) அமைந்துள்ளன. அகப்படுத்தும் வாக்கியம் விட்டேன் என்ற வினை முற்றினைக் கொண்டு முடிகிறது. அகப்படும் வாக்கியங்கள் செய்வித்தான், எழுந்தருளுவித்தான், வைத்தான், விட்டான் என்ற வினை முற்றுக்களைக் கொண்டு முடிகின்றன. கலவை வாக்கியம் (Comlpex Sentence) அமையும் போது இம்மூற்று வினைகள் நான்கும் செய்வித்து, எழுந்தருளு வித்து, வைத்து, விட்டு என இறந்த கால வினையெச்ச அமைப்புக்களாக (Past Participles) மாற்றல் விதிகள் (Transformational Rules) மூலம் மாற்றப் படுகின்றன. ஐந்தாவது அகப்படும் வாக்கிய முறை வினையடை (Adverb of Manner) அமைய இடமளிக்கிறது. பிராமணர் நால்வர், 2 கைச்சகாயத்தவர் தேவரடியார் போன்று 52 குடியும் என்ற பெயர்கள் வினையடையாத (அதாவது முறை வினையடையாக) மாற்றம் பெற்று வழங்குகின்றன. அகப் படுத்தும் வாக்கியத்தின் வினைமுற்றான விட்டேன் என்பதற்கு முன்னர் செய்கைக்குப் பரிஹாரமாக என்ற தொடர் அமைந்துள்ளது, இதில் பரிஹார மாக என்பது முறைவினை அடை இதற்கு முன்னர் வரும் செய்கைக்கு என்பது நான்காம் வேற்றுமையில் வரும் சொல் அமைப்பு.

ஆகவே, இந்தக் கலவை வாக்கிய அமைப்பு இரண்டு முக்கியமான மாற்றல் விதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1. மு.வி. ——— வி.எ.

——————— ———————இ

எ.கா. வைத்தான் —— வைத்து
செய்வித்தான் —— செய்வித்து

2. **பெயர் ——— வி.அ.**
————————————மு.

எ.கா.

பரிஹாரம் + ஆகா ———— பரிஹாரமாக

இது போன்ற அமைப்பில் இடம் பெற்றுள்ள அகப்படும் வாக்கியங்கள் அனைத்துமே ஒரு மாற்றல் விதியினால் (Transformational Rule) இங்கு விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் முற்றுவினைக்கு முன்னர் வரும் வினையடைகள், இடம் மற்றும் முறை அமைப்பில் வருவதும் குறிப்பிடத்தக்கது. நான்காவது அகப்படும் வாக்கியத்தில் முறைவினையடை (Adverb of Manner) இடம் பெறுகிறது. இவ்வகையான கலவை வாக்கிய அமைப்பு எழுத்து வழக்கில் அதிகம் இடம் பெறுவதில்லை. ஆனால் பேச்சு வழக்கில் இது போன்ற அமைப்பு பொதுவாகவும் இயல்பாகவும் காணப்படுகிறது. நம் கருத்துக்களைப் பேச்சின் மூலம் வெளியிடும் போது தனித்தனி வாக்கியங்களாக அமைக்காமல் ஒரு கருத்தினைத் தொடர் நிலையாக வாக்கியங்களைச் சேர்த்தே பெரும்பாலும் நாம் அமைக்கிறோம். அக்காலத்தில் கல்வெட்டினைப் பொறித்தோர் இது போன்ற கருத்து வெளிப்பாட்டு முறையினைப் பின்பற்றியே கலவை வாக்கியங்களை அமைத்துள்ளமை நன்கு தெரிய வருகின்றது. கல்வெட்டு செதுக்கியோருடைய பேச்சு வழக்கும், ஓரளவு கல்வியறிவும் கூட இதற்குக் காரணமாக அமையலாம்.

2.5 பொருள் மயக்கம் தரும் தொடர்கள்(Ambiguous Phrases)

கல்வெட்டுக்களில் பொருள் மயக்கம் தரும் சிலதொடர்களும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

> ''கோயிலில் மடத்து நிர்வாகம் செய்வார் முத்தாண்டார் முத்தரும், வாசாண்டை மகன் பச்சைநாயனும், முளவாயில் சன்மதானப்பெருந் தெருவில் வணிகபுர நாதரான வைஸ்ய வாணிய நகரத்தாரில், வட வாணியன், பெரிய பெருமாள், காமாண்டைச் செட்டியார் இவர்கள் தானமாக நாள்தோறும் ஒரு திருப்பேர்க்கும் ஒருபொழுது படைப்பதாக வாங்கின பொன் 21'' (Mulbagal. 74).

பொருள்:1 வட வாணியன், பெரிய பெருமாள், காமாண்டை செட்டியார் இவர்கள் மூவரும் கொடுக்க முத்தாண்டார் முத்தரும், பச்சை நாயனும் வாங்கிய பொன் 21 அல்லது

பொருள்: 2 இந்த ஐந்து பேரும் வேறு யாரோ தானமாகக் கொடுக்க வாங்கிய பொன் 21.

"இப்படிக்குத் தானப்பன் உருவும் சமைத்து எழுத்தும் வெட்டுவித்தான்" (Hosakote.98)

இவ்வெடுத்துக் காட்டில் உருவம் சமைத்தவன் தானப்பனா? அல்லது தானப்பன் உருவை வேறொருவன் சமைத்தானா? என்பது பொருள் மயக்கமாக இருக்கிறது.

2.6 விடுபட்ட சொற்களைக் கொண்ட தொடர்கள்

கல்வெட்டுத் தொடர்களில் சில இடங்களில் இரண்டு சொற்களுக்கு இடையில் ஒரு சொல் இருந்திருந்தால் பொருள் மயக்கம் இன்றி இருந்திருக்கும் என்ற நிலையை நாமே ஒரு சில இடங்களில் உய்த்துணர்ந்து கொள்ளக்கூடிய நிலை காணப்படுகின்றது.

செய்வித்த தூம்பும் தொட்டியும் (இவை) (Channapatna, 35)

இத்தொடருடன் 'இவை' என்ற ஒரு சொல் இறுதியில் வந்திருப்பின் தொடர் உழுவற்றதாக, பொருள் மயக்கம் இல்லாததாக அமைந்திருக்கும்.
மேலும்,

"சங்க நாயகத்தேவன் ஏரிகட்டி பயிருடன் தேவதான சந்திராதித்த வரை செல்வதாக விட்டேன்." (Srinivasapur, 8)

என்ற தொடரில் பெயருக்குப் பின் ஆகிய நான் எனும் நான் என்ற பண்புருபும், தன்மைச் சொல்லும் பயிருடன் என்ற பெயர்ச்சொல்லுக்குப் பின்னர் செயப்படுபொருளான (நிலம்) என்ற பெயர்ச்சொல்லும் வந்திருப்பின் இத் தொடர் இன்னும் நன்றாகப் பொருள் தரும் தொடராக இருந்திருக்கும்.

2.7 பெரும்பான்மை வரிசைக்கிரமச் செய்திகளைக் கொடுக்கும் தொடர்கள்

மங்கல வாசகம், கல்வெட்டுத்தோன்றிய காலம், கல்வெட்டுச் செய்திகள் கையெழுத்துக்கள் ஓம்படைக்கிளவி என்று பொதுவாகக் கல்வெட்டுச் செய்தி களை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

2.7. (1) மங்கல வாசகம்

ஸ்வஸ்திஸ்ரீ (kolar , 18; Mulbagal , 179a) இச்சொல்லே மங்கல வாசகம் எனப்படுகிறது. இச்சொல் ஏறக்குறைய எல்லாக் கல்வெட்டுகளிலுமே காணப் படுகிறது. எப்போதுமே மங்கலமாகத் துவங்க வேண்டும் என்ற நியதி அக் காலத்தில் பயன்பாட்டியல் இருந்தமையை ஸ்வஸ்திஸ்ரீ என்ற துவக்கச் சொல்லின் மூலம் அறியலாம்.

2. 7. (2) கல்வெட்டுத் தோன்றிய காலம்

கல்வெட்டு எழுதப்பட்ட காலத்தை

அ. "(ச)கரெயாண்டு ஆயிரத்திரு நூற்றொருபத்தஞ்சு சென்று ஆறாமாண்டான விஜய சம்வத்சரத்து தைமாதம் இருபத்தாந்தியதியில்" (kolar , 18)

ஆ. "வியவருஷத்து வைகாசி மாதம் முதல் (Malur, 39)

இ. "சகாப்தம் 1233 இதன் மேல் செல்லாநின்ற கலியுக வருஷம் 4412. இதன் மேல் விரோதிகிருது வருஷத்து மகர ஞாயிற்று பூர்ப பக்ஷத்து தசமி யும் புதன் கிழமையும் ரோகினியுமான நாள்" (Mulbagal, 179a)

ஈ. "சர்வ பூச்சக்கரவத்திகள் ஸ்ரீபோசள வீரராமனா தேவற்கு யாண்டு 37வது" (kolar, 234)

என்று மேற்காணும் முறையில் குறிப்பிடுகின்றனர். இப்பகுதியில் சகரவருஷம், நூற்றாண்டு, அதுகழிந்து 6ம் ஆண்டு போன்ற குறிப்புகளுடன் குறிப்பிடும் முறை காணப்படுகிறது. ஒரு ஆண்டு மிகச்சிறப்பான ஆண்டாகவும் அதைக்குறிப்பிடின் எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் இருப்பதையும் கொண்டு அந்த ஆண்டினைக் குறிப்பிடும் முறையும் இருந்தது. மேலும் சகாப்தத்தினையும், கலி வருஷத்தினையும் குறிப்பிடுகின்ற முறையும், வீரபுருஷரான அரசர்கள் ஆட்சி செய்யும் ஆண்டினையோ, அன்றி அவர்கள் ஆட்சியாண்டினையோ குறிப்பிடும் முறையும் காணப்படுகின்றது. இதனை நாம் மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுக் களின் மூலம் அறியலாம்.

2.7. (3) கல்வெட்டுச் செய்திகள்

இப்பகுதியில் கல்வெட்டுத் தொடர்கள் நீண்டனவாகவும், அடைகள் பல கொண்டனவாகவும் அமைந்துள்ளன.

எ.கா. ஸ்வஸ்திஸ்ரீ மனுமகா மண்டலேஸ்வர மலெராஜராஜ மலெ பொருள் கண்ட சமுப்ராதி வதியாயுள்ள வீரவல்லாள தேவர் ப்ருதிவி ராஜ்யம் பண்ணா நிற்க ஸ்வஸ்திஸ்ரீ வட்ட வியாபாரி உபயநானா தேசிகற்கு முக்கியரான கொல்லி யாதிபன், உப்ப நெல்லி புரவராதீஸ்வரன், நடனராதித்யன், நிகரிலி சோழ மண்டலத்து கோளால நாட்டு நாட்டு நாயகஞ் செய்வார், கோளால நாட்டு கொத்தனூர் கீழ் தெந்தட்டு மடை விளாகத்தில் ஸ்ரீகைலாயமான, ஸ்ரீமூலஸ்தான முடையார் கோயில் எடுத்து இந்த மடை விளாகத்துக்குச் செல்லுஞ் சூலக்கல்லுக்குள் சதுச்சீமையும், மாங் குட்டை, தட்டான்குட்டை புற்குட்டையில் மூன்றிலொரு பங்கு, அரக் கிறையில் கண்டகம், கொத்தனூரில் விளாங்கிறையில் 2கண்டகம் கழனி இச்சேக்ஷத்திரத்துக்கு உடையவர்கள் மல்லியூரில் காஸ்யப கோத்திரத்தில் மணியபட்டர் பிள்ளைகள் பெரிய கற்பக பட்டர், சிறுகற்பகபட்டர், இரு வருக்கும் நாலத்தொன்று காஸ்யப கோத்திரத்தில் கேரள பட்டர், கௌசிய கோத்திரத்தில் கனக சபாபதி ஆழ்வார் மகன் மூலஸ்தான முடையார்க்கு உதகம் வாத்து குடுத்த க்ஷேத்ரம் (வயல்) னாலத்தொன்று" (kolar, 82)

2) ஸ்வஸ்திஸ்ரீ நிகரிலி சோழ மண்டலத்துப்புதநாட்டுப் புள்ள தேவமண் டலிகர் படைவீட்டில் சித்தீஸ்வர முடையார்க்கு ஸ்ரீகாஞ்சி மாநகரத்து வாணிகன் குடிகிழான் ஏரிகட்டி பயிருடன் தேவதான சந்திராதிதவரை செல்வதாக விட்டேன். (Srinivasapur,8)

போன்ற மேற்கூறப்பட்ட இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களில் அரசனது மெய் கீர்த்திகள் அரசனது வீரச்செய்திகள் அல்லது அடைமொழிகள், அவரிடம் வேலை செய்பவர் இன்ன நாட்டை, இன்ன ஊரைச் சேர்ந்தவர், இன்னாருக்கு இதைத் தானமாகக் கொடுத்தார். அந்த தர்மம் இத்தனை காலம் செல்லவேண்டும் என்று குறிப்பிடும் பழக்கம் காணப்படுகின்றது. சில கல்வெட்டுகளில் இம்முறை மாறி இவர் மகன், இவர் பேரன், இந்த ஊரைச்சேர்ந்தவன் என்று செய்தி களைக் குறிப்பிட்டுக்கூறும் முறையும் காணப்படுகின்றது. இதனை மேற்கூறிய கல்வெட்டுக்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

2.7 (4) கையெழுத்துக்கள்

"தானப்பன் உருவும் சமைத்து எழுத்தும் வெட்டுவித்தான்" (Hosakote,98)

"இவை செல்லப்பிள்ளை எழுத்து" (Kankanahalli ,109 back)

"கல்லிலும் செம்பிலும் வெட்டிக்குடுத்தோம்" (Malur, ?9)

"இவை குடையமுழான் எழுத்து" (Hosakote, 162)

"இசாசனம் எழுதினேன் இவ்வூர் ஊர்காணக்கன்
பிராமணன் அறங்கள் உறீமயரென இவைஎன்எழுத்து"(Channapatna,42a)

இவை நின்றார் எழுத்து. நாட்டுக்கணக்கணக்கன் பெரிய பிள்ளை
எழுத்து" (Bangalore, 115)

போன்ற இவ்வெடுத்துக் காட்டுக்களின் மூலம் அறச்செயல்களுக்குத் தொடர் புடையவரின் கையொப்பம் சான்றாக இருந்தோர், அதனை வெட்டியவன் இன்னான், செய்வித்தான் இன்னான் என்பன போன்ற பல செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடியும். பெரும்பான்மைக் கல்வெட்டுக்களில் இச்செய்திகள் முழுமையாக இருப்பதில்லை.

2.7 (5) ஓம்படைக்கிளவி

ஓம்படைக்கிளவி என்னும் இப்பகுதியில் ஒரே வகையான வாசகம் பெரும் பான்மை காணப்படும். இவை கல்வெட்டுகளின் இறுதிப்பகுதியாகும்.

"உறரி (Channapatna 42a)

"இத்தன்மம் ஸ்ரீவைஷ்ணவர் ரக்ஷை" (Bowringpet, 7b)

"ஸ்ரீமாஉேறஷ்வர ரக்ஷை" (Bowringpet 27,30)

"இத்தன்மம் போற்றினார் புன்ய கர்மாவாம்" (Malur 5)

போன்ற மங்கலமாக முடிகின்ற வழக்குகள் பல கல்வெட்டுக்களில் காணப்படு கின்றன.
மேலும்,

"இத்தன்மத்துக்கு இலங்கணம் பண்ணினவன்
கங்கைக் கரையில் குரால் பசுவைக்
கொன்றான் பிரம்ப உறத்தி" (Bowringpet, 27 Mulbagal, 100)

என்ற இச்சொல் வழக்கு பெரும்பான்மையாக கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இம்முறையில் கூறின் பாபம் செய்யப்பயப்படுவான் என்ற எண்ணத்தில் இவ்வாறு கடுமையாகக்கூறப்பட்டிருக்கலாம் மேலும் இவை தர்மத்தை பாதுகாக்கும் காப்புப் பொருளிலும் கூறப்பட்டன எனலாம்.

மேலும் கிணறு, மரம் போன்ற எல்லைக்குட்பட்டவற்றைக் குறிப்பிடும் முறையும் எல்லை வரையறைச் செய்திகளைக் குறிப்பிடும் முறைகளும் இக்காலப் பட்டயங்களின் முறையை ஒத்திருக்கின்றன.

"இந்த தர்மத்துக்கு லங்கணம் பண்ணினார்
உண்டாகில் கங்கைக் கரையில் குரால்
பசுவைக் கொன்ற பாவங்கொள்ளக்
கடவார்கள்" (Bangalore, 98)

மேற்கூறப்பட்டுள்ள இவ்வெடுத்துக்காட்டில் ஓம்படைக்கிளவி என்னும் பகுதியில் மட்டுமே உண்டாகில் என்ற முறையில் நிபந்தனைத்தொடர்கள் ConditionalPhrases காணப்படுகின்றன, கல்வெட்டின் மற்றெந்தப் பகுதியிலும் இந்த நிபந்தனைத் தொடர்கள் இல்லை. வேலும் எதிர்மறைத் தொடர்கள் (Negative Phrases)வேறெந்த இடத்திலும் காணப்படுவதில்லை. ஓம்படைக்கிளவி என்னும் இப்பகுதியில் மட்டும் வெகுசில கல்வெட்டுத் தொடர்களில் மட்டும் எதிர்மறைத் தொடர்கள் காணப் படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"இது ஆமல்ல என்றவர் கெங்கைக்கரையில்
குரால் பசுவைக் கொன்ற பாவத்திலே
போகக் கடவராக சாதனங்குடுத்தோம்" (Hosakote, 109 back)

பெரும்பான்மைக் கல்வெட்டுக்களில் இதை நிறுத்தினவன் தடுத்தவன் என்று வினையாலணையும் பெயரிலேயே கூறப்படுகின்றது. மேலும்,

"அறமறவர்க்கு அறம்அல்லது துணையில்லை" (Mulbagal, 34)
"அறம் மறவற்க" (Channapatna, 97)

போன்ற சில எதிர்மறைத்தொடர்களும் பல கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

பெரும்பான்மைக் கல்வெட்டுச் செய்திகள் தோன்றா எழுவாயில் வரும் தொடர்கள், பல வினைஎச்சங்களை உள்ளடக்கிய தொடர்கள் செயப்படு பொருள் குன்றிய வினைத் தொடர்கள் (Intransitive) காரணவினைத் தொடர்கள் வினைத் தொடர்கள் (Causative) என்ற முறையிலே காணப்படுகின்றன அதாவது வெட்டப்பட்டுள்ளன. மேலும் வினாத்தொடர்கள் கல்வெட்டுக்களின், எந்தப்பகுதியிலுமே காணப்படுவதில்லை. இதற்குக்காரணம் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் செய்திகளை அறிவிக்கும் சாதனங்கள் என்பதே.

எ. கா. "சந்திராதித்தவரை செலுத்தக்கடவோமாகக்கைக்கொண்டோம் இம் மூவோம்" (Mulbagal, 42b)

என்ற இக்கல்வெட்டுத்தொடரின் மூலமும்

"இப்படிக்கு இவை பெம்மி நாயக்கன் எழுத்து" (Malur, 8)
என்ற இக்கல்வெட்டுத்தொடரின் மூலமும் முறையே வினைப்பயனிலை, பெயர்ப் பயனிலைத்தொடர்களில் பெரும்பான்மை செய்திகள் கூறப்பட்டுள்ள நிலையினை உணரலாம். மேலும் எழுவாய் மறைந்து தோன்றா எழுவாயாக நிற்கும் தொடர்களே கல்வெட்டுச் செய்திகளில் அதிகமாகக் காணப்படுகின்றன.

"இச்சந்திக்கு இரண்டு திருவிளக்கு ஏற்றுவதாக ஒரு பொன் குடுத்தேன் தந்திரபாலன் தமையின் நீரணிஞ்சாரென" (Mulbagal, 53)

என்ற இவ்வெடுத்துக்காட்டின் மூலம் நீரணிஞ்சான் என்ற நான் என்பதை நாம் உணரமுடிகின்றது. 'என' என்ற மேற்கோள் இடைச்சொல்லுடன் (Quotative) முடியும் தொடர்கள் எல்லாமே தோன்றா எழுவாய்த் தொடர்களாகும் (Derived Subjects)

இக்கல்வெட்டுச் செய்திகளில் வரும் தொடர்களில் சிலவற்றில்
எ. கா. "செலுத்தக்கடவோம்" (Bowringpet, 26) "இதுக்குக்கடவன் உதைய பட்டர்" (Kolar' 75) என்ற இவ்விரண்டு தொடர்களும் வியங்கோள் வினையாகக் கொள்ளின் முதல் எடுத்துக்காட்டை கடப்பாட்டுப் பொருளிலும் இரண்டாவது எடுத்துக்காட்டுக் கட்டளைப் பொருளிலும் கூறலாம். இதனை வினையாலணையும் பெயர்த்தொடராகவும் கொள்ளலாம். ஒரு சில கல்வெட்டுக்களே பார்த்திருக்கின்ற காரணத்தால் இதனை இன்னும் அறிதியிட்டு உறுதியாகக் கூறமுடியவில்லை.

"இதைத்தடுத்தவர்கள் கங்கைக் கரையில் குரால் பசுவைக் கொன்றார் பாவத்தில் மோகக்கடவராக" (Hosakote, 109)

மேற்கூறப்பட்ட இவ்வெடுத்துக்காட்டு வைதல் பொருளிலும் வருகின்றது. சில இடங்களில் வாழ்த்தல் பொருளிலும் தொடர்கள் அமைந்துள்ளன. இவை ஓம்படைக்கிளவி என்னும் பகுதியில் மட்டுமே வருகின்றன.

முடிவுரை

கல்வெட்டுத்தமிழில் சொற்றொடர் அமைப்பு ஆய்வு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதன்மூலம் அக்காலப்பேச்சு வழக்கு எப்படி இருந்தது, சொற்றொடர் அமைப்புக்கள் எவ்வாறிருந்தன, சொல்லாட்சி எவ்வாறு அமைந்திருந்தது, பொருள் வெளிப்பாடு எங்ஙனம் அமைக்கப்பட்டிருந்தது போன்ற பல்வேறு செய்திகளை நம்மால் அறியமுடிகிறது.

கல்வெட்டுக்கள் இன்றேல் நாம் அக்கால நாகரிகம், அரசர்கள் மக்கள் அவர்களின் வாழ்வியல் அறங்கள் போன்ற பல செய்திகளை ஓரளவிற்குத் தெளிவாக அறிந்திருக்க முடியாது. சில செய்திகளைக் கொண்டு நாம் ஓரளவு ஊகித்துணர முடிந்தாலும் இவ்வாறு அழியாத உறுதியான செய்தித்தொகுப்புக்கள் நமக்குக் கிடைத்திருக்கா. தமிழ்மொழி எந்தெந்த இடங்களில் பரவியிருந்தன என்பதனையும், காலத்திற்கு காலம் தமிழ் மொழி எவ்வாறு வேறுபட்டது என்பதையும் பிற மாவட்டங்களில் அவை கலந்திருக்கின்ற நிலையினையும் அறியும் ஆய்விற்கு இன்றியமையாத துணையாக இருப்பவை இக்கல்வெட்டுக்கள்; அவை பற்றிய ஆய்வுகள்

மேற்கோள் நூல்கள்:

சதாசிவப்பண்டாரத்தார் தி. வை. மணிவாசகர் நூலகம், சிதம்பரம். 1977.

அரங்கன் கி. தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்: 1985.

Agesthialingom, S. and Shanmugam S. V. *Language of Tamil Inscriptions* (1250-1350AD) Annamalai University,Annamalai nagar,1971.

நூல் மதிப்புரை

நூலின்பெயர் : திருக்குறள் சோலையின் சில தேன் துளிகள்
ஆசிரியர் : டாக்டர் தி. முத்து. கண்ணப்பன்
பதிப்பு : அதிபத்தர் பதிப்பகம்
6, வசந்தா பிரஸ் சாலை
அருணாசலபுரம்
சென்னை-600 020.

ஆண்டு : 1986
பக்கம் : 178
விலை : ரூ. 20/-

மனித நல்வாழ்விற்குரிய, சிறந்த இலக்கணமாக விளங்கும் திருக்குறளை ஆழ்ந்து கற்றதின் பயனாக எழுந்த சிந்தனை அலைகள் இனிய வாழ்க்கைப் படமாக விரிந்து மலர்வதைத் 'திருக்குறள் சோலையின் சில தேன் துளிகள் என்ற சிறந்த நூலில் பார்க்க முடிகிறது. குறளில் கற்றுணர்ந்த அரிய கருத்துக் களை ஏற்று வாழ்க்கையில் கண்டுணர்ந்த அனுபவ உண்மைகளுடன் கலந்து கவின்மிகு இலக்கிய படைப்பாகச் சமைத்துத்தரும் திறமையுடன் இந்நூலைப் பேராசிரியர் டாக்டர். தி. முத்து. கண்னப்பன் ஆக்கித் தந்துள்ளார்.

எல்லையில்லாப் பரப்பாக விரிந்து கிடைக்கும் இயற்கை அன்னையின் எழிலையும் தொழிலையும் சிந்தனை உலையிலிட்டுச் சீர்தூக்கிப்பார்த்து அரிய கருத்தோவியங்களைக் திருக்குறள் கருத்துக்களுடன் நன்கு பொருந்தும் பாங்கில் ஆசிரியர் உருவாக்கியுள்ளார். தான் உணர்ந்த உண்மைகளைக் கற்றோரும், மற்றோரும் நன்கறிய வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் குறள் பாக்களில் திரண்ட கருத்துக்களை இனிய கதைப்போக்கில் எளிமையாக விளக்கித் தரும் பாங்கு படிப்போரைக் கவரும் தன்மையுடன் விளங்குகிறது. சூழ நடப்பதை ஆழ மாக உணர்ந்து, வாழ்க்கை உண்மைகளைக் திருக்குறளின் வழிநின்று விளக்கிக் காட்டியிருப்பது இந்நூலின் சிறப்புத் தன்மையாக அமைகிறது,

திருவள்ளுவரை இன்றைய உலகில் இயல்பாக நடமாட விட்டு அன்று அவர் படைத்த திருக்குறள் உண்மைகளைக் கனிவாகவும் இனிதாகவும் விளக்க நூலாசிரியர் முற்பட்டுள்ளது அவருடைய கற்பனைஆற்றலுக்கும் படைப்பாற்றலுக்கும் விளக்கமாக உள்ளது. உலக அரங்கில் இயற்கைச் சூழலில் வள்ளுவர் ஒரு நாடக பாத்திரமாக உலாவி வாழ்க்கையின் இயல்புகளையும் உண்மைகளையும் விரிவாக விளக்குவதை நூலில் பரக்கக் காணலாம். ஆனால் கருத்து விளக்கச் சூத்ரதாரி யாக நூலாசிரியர் திரைமறைவில் தெளிவான சிந்தனையுடன் நடமாடுவது நன்கு தெரிகிறது.

திருக்குறள் கருத்துக்களை மட்டும் விளக்குவது ஆசிரியரின் நோக்கமாகத் தெரியவில்லை. பயன் கருத்துக்களைப் பாங்குற விளக்க வேண்டும் என்ற தணியாத ஆவல் மேலோங்கி அவரது பேனா விரைந்துள்ளது என்ற உண்மை செவ்வனே விளங்குகிறது. அறிவியல் போக்கில் அரிய கருத்துக்களை 'அழகாகச் சிந்தித்து அவனி வாழ்வுக்கு உதவும் நிலையில் அள்ளி அள்ளித் தரும் நூலாக இது படைக்கப் பெற்றுள்ளது.

தாமரை (பக்.4-5), அனிச்சம்(பக் 7-9),பொய்ப்புதர்(பக்.40-41), சூது (பக்.43-48), யானை (பக்.69-74), குன்றிமணி(பக்.88-90),நச்சுமரம்(பக்.105-108) போன்று பலவற்றைக்கொண்டு வாழ்வியல் கருத்துக்கள் பக்கம் பக்கமாக விளக்கம் பெறுகின்றன. சூதை விளக்க விரும்பும் ஆசிரியர் சூதைக்குறிக்கும் பல்வேறு சொற்களைக் தருகிறார். தருமன், நளன் ஆகியோரின் சூதாடி வாழ்விழந்த போக்கைக் காட்டுகிறார். கருத்துக்களைக் குவிக்கிறார்.

மிகுதியான கருத்துக்கள் ஆசிரியரின் மனத்தை ஆண்டு, வெளிவரத் துடிப்பதைப் பல இடத்தில் காண முடிகிறது. சூதாடி வாழ்விழக்கும் தருமனின் வினையை விளக்கும்போது திருக்குறளிலிருந்து பாரதத்துக்கு நம்மை இடம் மாறச் செய்து விடுகிறார். எடுத்த பேனா தொடுக்கும் கருத்துக்களுக்கு மட்டும் சிறப்புக் கொடுத்துள்ளது.

நூலைப் படிக்கும்போது விறுவிறுப்புக் காட்சிகள் நிறைந்த ஒரு நாடகத்தைப் படிப்பது போன்ற உணர்ச்சி நிலை கொள்கிறது. எளிதாக மனதில் பதிந்து இனிதாகப் பயனைத் தர வேண்டும் என்று கருதி ஆசிரியர் இந்த நூலை எழுதி இருக்க வேண்டும்.

'தேன்' இனிய உணவாகவும் அரிய மருந்தாகவும் அமைகிறது. ஆனால் அதனை கூட்டிலிருந்து எடுப்பது கடினம். எடுத்துச் சேர்த்து விட்டால் அதன் மதிப்பும் பயனும் மிகுதி. பேராசிரியர் டாக்டர். முத்து. கண்ணப்பன் அவர்கள் திருக்குறள் சோலையிலிருந்து சில தேன் துளிகளைக் தருகிறார். அரிது முயன்று அன்புடன் தருகிறார். அவற்றை அள்ளிப் பருகி, அறிவு விளக்கத்தையும் வாழ்க்கைப் பயனையும் பெறலாம்.

டாக்டர் அ.நா. பெருமாள்

நூல் மதிப்புரை

நூலின்பெயர் : **பாரதேந்து அரிச்சந்திரர்**

மூலம் : மதன்கோபால்.

தமிழாக்கம் : முத்துச்சண்முகன்

பதிப்பு : சாகித்திய அக்காதெமி வெளியீடு.

ஆண்டு : 1986

பக்கம் : 52.

விலை : ரூ 5/-

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய நாட்டில் தோன்றிய பல பெரிய சிந்தனையாளர்களுள் ஒருவர் பாரதேந்து அரிச்சந்திரர் என்பவர். இவர் 1850-ஆம் ஆண்டு புனித காசியில் அகர்வால் குடும்பத்தில் கோபால் சந்திரர் என்பவருக்கு மூத்த மகனாய் பிறந்தவர், கோபால் சந்திரர் ஒரு திறமையான வியாபாரி. அதற்கீடான கவித்துவ ஆற்றலும் உள்ளவர். 'கிர்தர்தாஸ்' என்ற புனைபெயரில் நாற்பது நூல்கள் எழுதினார். பண்பு மிக்க கோபால் சந்திரரின் குடும்பம் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஆதரித்தது.

அரிச்சந்திரர் தன் தந்தையின் இலக்கிய ஆற்றலைப் பெற்றிருந்தார். பிஞ்சிலேயே பழுத்த பிள்ளையாகத் திகழ்ந்தார். செல்வக் குடும்பத்தில் 'பிறந்த அரிச்சந்திரர், அக்கால மரபிற்கேற்ப பார்சீ, உருது மொழிகள் கற்பிக்கும் பள்ளிக்கு அனுப்பப் பட்டார். பிரஜ் மொழியில் எழுதப்பட்ட கவிகளை விளக்கவும், அதில் கவிதைகள் இயற்றவும் ஆற்றல் பெற்றார் அக்கால வழக்கப்படி அரிசந்திரருக்கு பதினோராவது வயதில் திருமணம் நடைபெற்றது. தந்தைக்குப் பிறகு குடும்பப் பொறுப்பைஏற்று நடத்த ஆரம்பித்ததும் ஆசைகளை அடக்க முடியாத அளவு செலவு செய்தார். ஏழைகளைக்காக்கவும், கலைகளைக் காக்கவும், கலைஞர்களை ஆதரிக்கவும் தன் செல்வத்தை எவ்வளவு செலவு செய்யவும் அவர் தயங்கவில்லை. வெளியுலக வாழ்க்கையில் இவ்வளவு பண்புடன் வாழ்ந்தவர் தன்அகவாழ்வில் சிறிதும் பொறுப்பற்று வாழ்ந்தார். அரிச்சந்திரரின் உல்லாசமான கேளிக்கை வாழ்க்கை அவருக்கு, 'பாரதேந்து' (இந்திய சந்திரன்) என்ற பட்டபெயரைக் கொடுத்தது.

இவர் புராண மன்னன் அரிச்சந்திரனைப் போலவே எவ்வளவு சிக்கலிலும் உண்மைக்காகவே வாழ்ந்தார். நாளடைவில் அவருக்குரிய செல்வம் அனைத்தும் அழிந்து, கடனும் அதனால் பல தொல்லைகளும் ஏற்பட்ட போதுங்கூட அவர்தம் இந்தி இலக்கியப் பணியில் சிறிதும் தளரவில்லை. 1867- இல் கவிவசனசுதா என்ற மாத இதழ் ஒன்றை அவர் தொடங்கினார். அவருடைய கவித்துவ ஆற்றல், பாக்களை எடுத்துக்கூறும் பாங்கு, இதழில் வெளிவந்துள்ள அவரது கருத்துக்கள் இவைகளெல்லாம் இவ்விதழைப் படிப்பவர் தொகையைப் பெருக்கின. 1873- இல்

'ஹரிச்சந்திர சந்திரிகா' என்ற வேறொரு இதழைத் தொடங்கினார். இங்குக் குறிப்பிடத்தக்கது, இவ்விதழ்கள் மக்கள் பேசிவந்த இந்தி மொழியிலேயே எழுதப்பட்டு வந்ததாகும்.

அரிச்சந்திரர் காசியில் ஒரு செல்வச் சீமான் வீட்டில் பிறந்தவராயினும், அவர் பழகியதெல்லாம் சாதாரணமக்களோடுதான். சமூகத்தின் அடித்தளத்தில் இருப்பவரோடு ஒன்றாக இருந்து பாடல்களை இயற்றுவார். இதழியலில் கண்ட வெற்றி அவரை மேலும் இரண்டு இதழ்களைத் தொடங்கத் தூண்டியது. பசுவதை செய்தல் புலால் உண்ணல், மதுவருந்தல் இவற்றைத் தடைசெய்யவேண்டும் என்று பிரசாரம் செய்தார்.

அரிச்சந்திரர் சிறந்த நடிகரும் நாடக ஆசிரியருமாவர். இவர் புராணம், வரலாறு, சமூகம் இவைகளிலிருந்து நாடகக் கருப்பொருளை எடுத்துக்கொண்டதோடு அவர்காலச் சமூகச் சிக்கல்களைக் கருப்பொருளாகக் கொண்டது புதுமை. குறுகிய கால அளவில் பல்வேறு துறைகளில் தன் ஆற்றலை வெளிப்படுத்திய அரிச்சந்திரர் 1885 - இல் மறைந்தார்.

பாரதேந்து அரிச்சந்திரர், வாழ்க்கை வரலாறு இனிய எளிய நடையில் ஆசிரியர் முத்துச் சண்முகன் என்பவரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது ஒரு மொழி பெயர்ப்பு நூல் என்ற எண்ணம் எழாதவாறு தமிழில் எழுதப்பட்டுள்ளது. பாரதேந்து அரிச்சந்திரரின் அகப்புற வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆசிரியரால் சுவைபடக் கூறப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலை அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும்.

இக்கால இந்திமொழியின் தந்தை எனப்போற்றப்படும் பாரதேந்து அரிச்சந்திரர் இந்தி மொழி உருவாவதற்கும். அம்மொழி பல்வேறு இலக்கியத் துறைகளில் வளர்ச்சி பெறுவதற்கும் வழிகாட்டியவர். அப்பெருந்தகைக்கு இந்தி மொழி பேசும் மக்கள் இன்றும் என்றும் கடமைப்பட்டவராவர்.

டாக்டர். சசிவல்லி

நூல் மதிப்புரை

நூலின்பெயர் : **தமிழ் இதழியல் வரலாறு**

ஆசிரியர் : மா. சு. சம்பந்தன்

வெளியீடு : தமிழர் பதிப்பகம்
243, லிங்க செட்டி தெரு.
சென்னை-600 001

பக்கம் : 354

ஆண்டு : 1987

விலை : ரூ 27

மக்கள் தொடர்பு சாதனங்களில் முதன்மையானது இதழ்'.இவ்விதழ் பற்றிய ஆய்விலும், விமர்சனத்திலும் இதுவரை அந்தந்தத் துறைகளில் - ஆய்வு செய்து வருகின்ற ஆராய்ச்சி மாணவர்களும் பேராசிரியர்களும், பத்திரிகை ஆசிரியர் களும் ஈடுபட்டுக் கட்டுரைகளும் நூல்களும் எழுதிவந்திருக்கின்றார்கள், வருகிறார் கள். ஆனல் ஒரு பார்வையாளராக ஒவ்வொரு கூட்டத்திற்கும் நிகழ்ச்சிக்கும் சென்று வந்த அனுபவசாலியாக இருந்து வந்ததனாலும் எங்கெங்கு நூல்வெளியிட்டாலும் இதழ்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் சேகரித்து வைத்துத் தானும் மற்றவர் களும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியுள்ளவராக இருந்ததனாலும் இந் நூலாசிரியர் மா.சு. சம்பந்தன் அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்தச் செய்திகளைக் கொண்டு தமிழுக்கு வளம் சேர்க்கும் நோக்கில் 'தமிழ் இதழியல் வரலாறு' என்ற நூலை எழுதியிருக்கிறார்.

தமிழில் இதுவரை வெளிவந்த எல்லா இதழ்களையும் முறையாகத் தொகுத்துக் கொடுத்திருக்கிருர் ஆசிரியர். தமிழ் இதழ் என்று சொல்லும்போது உலக நாடு களில் தமிழர்கள் வாழும் இடங்களிலிருந்து வெளிவரும் இதழ்களையும் கருத்தில் கொண்டு நூலாக்கியிருக்கிறார். முதல் தமிழ்இதழ் இலங்கையிலிருந்துதான் 1802-இல் வெளிவந்திருக்கிறது. எல்லா மரபுகளையும் கொண்ட சீனாதான் இதழ்களின் முன்னோடி தோற்றத்திற்கு கி.பி 363 இல் வித்திட்டிருக்கிறது. பழங்காலங்களில் 'கெஜட்' என்ற பெயர் தொடக்க கால இதழ்களுக்குப் பெயராகி இருந்தது. இத்தா லிய நாட்டில் தெருக்களில், தாள்களில் எழுதிவைத்த இதழ்ச் செய்திகளைப் படிப் பதற்குக் கட்டண மாகக் கொடுக்கப்பட்ட இத்தாலிய சிறுநாணயமான 'கெஜட்டா விலிருந்துதான் 'கெஜட்' வந்திருக்கிறது. மதுரை ஜடாமுனி கோயில் தெருவிலிருந்து 1909-இல் வெளிவந்த 'வித்யா பாநு' என்ற இதழில்தான் சுப்பரமணிய பாரதி யாரின் முதல் கவிதை வெளியாகியிருக்கிறது. இவை போன்ற முதன்மைச் செய்தி களை 'தமிழ் இதழியல் வரலாறு' வரலாற்றுச் செய்திகளாக்கித் தந்திருக்கிறது.

இந்நூலில் ஆசிரியர் தமிழ் இதழ்களின் போக்கு தமிழர்களின் வாழ்வியலின் ஒரு அம்சமாக மாறிவருவதைக் கோடிட்டுக் காட்டுகிறார். தமிழ் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் எவ்வாறு இருந்துவருகிறது என்பதைக் அடுக்கிக் கொடுத்திருக்கிறார். தொடக்ககால தமிழ் இதழ்களின் நிலைகளையும் தெளிவாக்கியிருக்கிறார் அக்காலத்தில் புகழ்பெற்ற தமிழ் இதழ்களையும் விரிவாக்கியிருக்கிறார். இவையெல்லாவற்றையும் சேர்த்து ஒரே தலைப்பில் தமிழ் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற ஒரே கட்டுரையில் கொடுத்திருக்கலாம். ஆசிரியர் இதை மூன்று கட்டுரையாக்கியிருக்கிருர்.

1.1.1785-இல் வெளிவந்த 'த டெய்லி யுனிவர்சல் ரிஜிஸ்தர்' என்ற இதழ் முதல் தான் சேகரித்த முன்மையான இதழ்களின் முதற் பக்கங்களை இந்நூலில் படங்களாக்கிக் கொடுத்திருக்கிறார். பாரதியாரை ஆசிரியராகக் கொண்ட மாதஇதழ் (1906 ஆகஸ்டு) சக்கரவர்த்தினி 'திராவிடன்' (3.6.1917) தேசபக்தன் (1919) பெரியாரின் குடியரசு '(17.7.27) ஆகிய இதழ்களும் இவற்றில் அடக்கம். தமிழில் இதுவரை வெளிவந்தஎல்லா இதழ்களும் முறைப்படி வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதழியல் ஆராச்சியாளர்களுக்கும் மரபைத் தெரிந்து கொள்ள விழைபவர்களுக்கும் சத்தானதாகும். மூன்று கட்டுரைகளில் எழுத வேண்டிய செய்திகள்பதினோறு பெரும் பிரிவுகளிலும் பன்னிரண்டு உட்பிரிவுகளிலும் விரிந்து செல்கிறது. இந்நூல் தமிழுக்குப் புதிய வரவைத் தேடிக் கொடுத்த பெருமை கொண்டது.

டாக்டர் துளசி. இராமசாமி

BOOK REVIEW

Title of the Book	:	**The Native Speaker is Dead**
Author	:	Thomas M. Paikeday
Publisher	:	Paikeday Publishing Inc., *Toronto & New York.*
Year	:	1985
Pages	:	XIV + 109
Price	:	$ 10.50/- (in *Canada), $* 7.50/- (U.S)

As the sub-title notes, this is 'an informal discussion of a linguistic myth with Noam Chomsky and other linguists, philosophers, psychologists and lexicographers', It attempts to establish that there is nothing or nobody as 'native speaker' of a language; that is to say, 'there is little that is native about language competence'.

Linguists, like Noam Chomsky, H.B. Wolf and Jef Verschueren have used the term 'native speaker' in their books, prefaces and reviews. The author takes this term as his subject of inquiry. As he feels that it is a 'myth' propagated by linguists, he tries to substantiate his view with the help of various scholars ideas through discussions and correspondences.

The book is in the form of a dialogue. The author poses himself as the inquirer. In some places the book takes the form of a debate and in certain places of a discussion. More than thirty members have given due participation in one or other phase of the dialogue. Actually, opinions of these persons, collected through questionaires and correspondences are put by the author into this form.

The inquiry opens with a discussion of the meanings and definitions given to the term in question. Mother tongue speaker, or a first language learner and such other definitions do not sound satisfactory and so the discussion proceeds. As in the author's words, he tries to show that, 'native speaker is as arbitrary and elusive a concept as Abominable snow man....'

The section, 'is a native speaker born or made?' is quite interesting. Terms like 'Indian English' come handy in the course of the discussion as they show similar ambiguity, There cannot be a 'native dish washer' or a clear cut definition of the same; Similarly the term in question is also vague. Prof. Basham feels that the term is a misnomer, 'as native speaker are not always

born into the language they speak. As Prof. Gates feels, it will be better to use the term 'competent speaker' rather than the elusive expression.

As per the intension of the author, a thorough and many sided study of the term is done in this small book. No definition seems to be perfect and clear. So it is concluded as a myth than a concept.

The book provides an interesting reading into the different phases of a word meaning, viz., 'native speaker'. In the words of A.A. Hill, it is a, fascinating document'.

Dr. Annie Thomas

The Books Published between January 1988 and June 1988

1. *Tamiḻakattil Ācivakarkaḷ*
   Dr. R. Vijayalakshmy
   P.N. 139, 1988, Rs. 18/- Pages XVI + 172

This book is the first one written on the Ajivikas in Tamil. It seeks to remove the erroneous idea that Ajivikas are a section of the Jains and to show that they were a group of people who held the doctrine of *ūḻ*. fate as fundamental to life. In addition to illustrating with several examples that this doctrine of fate is different from that of *karma*. It has also been explained how the doctrine of fate has been employed in Tamil literature from the Caṅkam age onwards. In later literature, *karma* and fate have mixed together. In these work, literary and archaelogical evidence has been used to determine the time period upto which Ajivikas lived in Tamil nadu. Since in the whole of Indian literature, it is only in the Tamil works, *Maṇimēkalai*, *Nīlakēci* and *Civañāṉa cittiyār (Parapakkam)* that the Ajivika doctrines are coherently described, the relevant sections of these works dealing with these theme are given as an appendix, Besides, commentary and explanatory notes to these passages by the author in contemporary Tamil language, are also appended.

2. *Hand Book - Tamil An Auto - Instructional Course*
   Dr. S. Jean Lawrence
   Dr. D. Renganathan.
   P.N. 140, 1988, Rs. 55/- U.S. $ 10, Pages XX + 504

Tamil An Auto-Instructional Course is meant for foreigners and Non-Tamils who wish to learn Tamil as a Second Language. The present book is a guide book for the Tamil Text Book prepared for this course.

Tamil being a diglossic language the literary and the Spoken Tamil lessons are presented one below the other. Authors have presented word by word as well as sentential meaning. Santhi rules, Grammatical and Cultural explanations, which are connected to the text are explained in the foot note. Whenever necessary, the Authors have splitted the words morphologically and presented lexical/grammatical meaning below the said lexical item.

Tamil Course Cassettes

International Institute of Tamil Studies conducts Tamil Courses for Non-Tamils. In addition to this it has also prepared 6 cassettes for Auto-Instructional Course to learn Tamil. The Cassettes contain, Written Tamil. Spoken Tamil and Drill material which are to be found in the Course Text-Book

BOOKS RECEIVED FOR REVIEW

1 Ramachandran, C. *Siddhas and our Heritage,* Palani: 1988.

2 Tamilmudi, Karai. *Miṉṭum Neruppuk Kaṉaikaḷ,* Puratci Patippakam Karaikkal: 1988.

3 Zvelebil, Kamil, V. *The Irulas of the Blue Mountains,* Syracuse University, New York: 1988.

A System of Transliteration of Tamil

உயிரெழுத்துகள் — Vowels

குறில் — Short	நெடில் — Long
அ ... a	ஆ ... ā
இ ... i	ஈ ... ī
உ ... u	ஊ ... ū
எ ... e	ஏ ... ē
ஒ ... o	ஓ ... ō

ஐ ... ai

ஔ ... au

ஃ ... h

மெய்யெழுத்துகள் — Consonants

வல்லினம்—Hard	மெல்லினம்—Soft	இடையினம்—Medial
க் ... k	ங் ... ṅ	ய் ... y
ச் ... c	ஞ் ... ñ	ர் ... r
ட் ... ṭ	ண் ... ṇ	ல் ... l
த் ... t	ந் ... n	வ் ... v
ப் ... p	ம் ... m	ழ் ... ḻ
ற் ... ṟ	ன் ... ṉ	ள் ... ḷ

R. No. 30339/72

Books for Review and typed Articles for Publication should be sent in *triplicate*, making use of the system of transliteration indicated on the reverse page, addressed to :

The Editor-in-Chief,
Journal of Tamil Studies,
International Institute of Tamil Studies,
C.I.T. Campus,
T.T.T.I. Post, Madras-600 113.
Tamil Nadu, India.

SUBSCRIPTION

	Within India		*Outside India*					
Annual	Rs.	35-00	U.S.	$ 12	or	Rs.	150
Single Copy	Rs.	20-00	U.S.	$ 7	or	Rs.	85
Life Membership	Rs.	300-00	U.S.	$ 100	or	Rs.	1250
Institutional Membership	Rs.	500-00	U.S.	$ 125	or	Rs.	1500

Published by Dr. K.D. Thirunavukkarasu, Editor-in-Chief and Director International Institute of Tamil Studies, on behalf of International Institute of Tamil Studies and Printed by Vijay Print Services Madras-600 034. Released in 1989